அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Multidisilinary Journal)
ISSN: 2582-399X

காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :24 October 2024
கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

DR R TAMILSELVAN
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

Dr SILLLALEE A/L S.KANDASAMY
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

Dr (Ms.) NILANKA LIYANAGE
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr N.MUTHUMANI
Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

Dr KANDASAMY
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

Dr S. KARUMPAAYIRAM
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

Dr B. DHANANJAYAN
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr S.KANNADASAN
Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

Dr P.SEKAR
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

DR G.UMAMAHESWARI
Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

Dr CHANDRAKALA
Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அகத்தினுள்

இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

அகத்தினுள்

இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

தமிழ்

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்

(Decolonisation and Deconstruction of Internal Conflict of Tamil)

முனைவர் க. ஜவகர்,

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்

Dr. K. Jawahar, Assistant Professor, Dept. of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur.

ஆய்வுச் சுருக்கம்

பின்காலனித்துவத்தின் முக்கியமான கூறுகளில் ஒன்று காலனிய நீக்கச் சிந்தனை. ஐரோப்பியமையக் கருத்தியலுக்கு மாற்றாக காலனியத்திலிருந்து விடுதலைபெற்ற நாடுகளின் கலை, அறிவுமரபுகளை முதன்மைப் படுத்துவது என்பது இதன் முக்கியமான கூறாக இருக்கிறது. அந்த வகையில், தமிழில் காலனிய நீக்கச் சிந்தனை என்பதில் தமிழ் அடையாள அரசியல், தொன்மை முதலியன முக்கியமானவைகளாக இருக்கின்றன. இங்குக் காலனிய காலத்துக்கு முன்புள்ள தமிழின் பழைய ஏற்றத்தாழ்வுநிலைகளை விமர்சனபூர்வமாக அணுகி அவற்றின் உள்முரண்களைக் களைந்து ஆக்கபூர்வமான கூறுகளை நவீன உலகமயப்பட்ட சமத்துவத்தின் கூறுகளையும் அனைத்துவித விளிம்பின் கூறுகளையும் உள்ளடக்கியவைகளாக முன்வைப்பது என்பது தேவையானதாகிறது.

Abstract

Decolonisation is a critical component of postcolonial theory. An essential component of this is the promotion of the artistic and intellectual heritage of colonially liberated regions as an alternative to Eurocentrism. In this framework, regaining Tamil identity, antiquity, and so on are significant aspects of Tamil decolonisation discourse. It is vital to critically examine pre-colonial Tamil inequalities, remove internal disparities and offer constructive components such as current globalised equality and all marginalised people.

திறவுச்சொற்கள்: காலனிய நீக்கம், பின்காலனித்துவம், அடையாள அரசியல், விளிம்புநிலை, உள்ளடங்கிய நிலை

Key Words: *Decolonisation, Postcolonialism, Identity Politics, Marginality, Inclusivity*

முன்னுரை

ஐரோப்பிய மையவாதம், மேலைமைய நோக்கில் உலகைக் காணுதல் என்ற அதிகாரக் காலனியத்துக்கு எதிரான பின்காலனியச் சொல்லாடலில் காலனிய நீக்கமென்பது மிகவும் அடிப்படையானது. இக்காலனிய நீக்கத்தில் தேசத்தை, பண்பாட்டை, உள்நாட்டு மரபுகளை முன்னெடுத்தல் என்பது முக்கியமான அரசியலாகிறது. இது மிகவும் முக்கியமான செயல்பாடாகும். எட்வர்ட் செய்த் இதை முதன்மையாக வலியுறுத்துகிறார். எனினும் காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பிவக் முன்வைக்கும் விளிம்பின் குரல்கள் மற்றும் ஹோமிபாபா முன்வைக்கும் கலப்பினம் என்ற இரு கருத்தாக்கங்களும் மிகவும் முதன்மையாக உள்ளன. குறிப்பாகத் தமிழின் காலனிய நீக்கக் கருத்தியல் என்பதை இன்று மிகவும் கவனமாக முன்னெடுக்க வேண்டிய நிலையில் இதை அணுக வேண்டியிருக்கிறது.

காலனிய நீக்கமும் பழமையின் மீள் கட்டமைப்புச் சிக்கல் நீக்கமும்

தமிழின், இந்திய நவீனத்தன்மை என்பது ஐரோப்பிய புத்தொளிக்காலத்தின் நீட்சியின் விளைவால் வந்தது என்று சொல்லலாம். வீரமாமுனிவர் தொட்டு தமிழுக்கு உலகத்தன்மையிலான நவீனப் பார்வை தொடக்கம் எனக்கூற முடியும். நவீனத் தேசியம் என்கிற கருத்தாக்கம் காலனிய உளவியலால் கட்டியெழுப்பப்பட்டது. அதனூடாக இந்திய, தமிழ் கலை, அறிவுமரபுகள் அச்சு, பதிப்பு, மொழிபெயர்ப்பு, பாடத்திட்டம் எனப்பலவழிகளில் காலனிய ஆட்சியினூடாகவும் கிறித்தவ மிசனரிகளின் செயற்பாடுகளினூடாகவும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றினூடாக புறநிலையிலிருந்து அணுகிய உலகநிலைப்பட்ட பார்வை ஒன்று முன்னணிக்கு வந்தது. இப்பார்வையினூடாக ஏற்பட்ட மாறுதல்கள் ஆக்கபூர்வமானவை. தமிழில் வீரமாமுனிவர், எல்லீஸ், ஜி.யூ.போப் எனத்தொடங்கி அதை இனங்கான முடியும். தேசிய இயக்கங்களின் பகுதியாக அமைந்த கலை, இலக்கிய, அரசியல் செயல்பாடுகள் காலனிய நீக்கத்திற்கு அரசியல் மட்டத்தில் உந்துசக்தியாக இருந்தன. அதேவேளையில் தொன்மை, மரபுகளை மறுகட்டமைப்பு செய்யும் விழைவையும் அவை முன்னிறுத்தின. ஆனால் கிறித்தவ மிசனரி, ஐரோப்பிய நவீனச்சிந்தனைப்புலத்தினூடாக வந்த தமிழ், இந்திய அறிவுமரபு குறித்த பார்வை உலகநிலைப்பட்ட நோக்குநிலையோடு அணுகுவதற்கான வாய்ப்பை வழங்கின. இந்தப் பார்வையை மிகவும் கவனமாக முன்னிறுத்தவேண்டியிருக்கிறது. ஏனெனில் பின்காலனியச்சூழலில், காலனிய நீக்கத்தின் பகுதியாக அமையும் கேள்வியற்ற பழமை, தொன்மைகளை முன்னிறுத்துவது என்பது ஏற்க இயலாது. அதேநேரத்தில் நவகாலனியத்தின் வடிவங்களையும் ஏற்க இயலாது. இந்த இரண்டுக்கும் இடையிலான ஒன்றாக அதை நாம் முன்வைக்க வேண்டும். அந்த ஐரோப்பிய நவீன சிந்தனை மரபு மார்க்சியம், பின்நவீனத்துவம், பெண்ணியம் என காலப்போக்கில் விடுதலையின் பாதையை முன்வைப்பனவாக மாற்றமடைந்திருக்கின்றன. இதை மிக நேர்த்தியாக நவீனத்தமிழ் மரபு உள்வாங்கியிருக்கிறது. அந்த உள்வாங்கல்தான் கலை, இலக்கியச் செயல்பாடுகளிலும் ஆய்வுகளிலும் மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றது. மார்க்சியம், அமைப்பியல், பின்நவீனத்துவம், பெண்ணியம், தலித்தியம், மாற்றுத்திறனியம், பால்புதுமையர் அரசியல் எனப் பலவாய் அப்போக்கு விரிவடைந்திருக்கிறது. அயோத்திதாசரிய, பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய சிந்தனைப்புலங்கள் இப்போக்குகளுக்கான பின்புலமாக அமைந்தன. இவை உலக அளவிலான நவீன குடியாட்சி, மனித சமத்துவ விடுதலைச் சிந்தனைகளை உள்வாங்கி இந்திய, தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப முன்வைக்கும் நோக்கத்தை வலியுறுத்தின. இந்நிலையில்தான் அந்த இரண்டுக்கும் இடையிலான பார்வை முக்கியமானதாகிறது. இந்த மையத்தில்தான் காயத்ரி ஸ்பிவாக், ஹோமிபாபா ஆகியோரின் பார்வைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

பின்காலனியச் சூழல் சுதேசியப் பண்பாட்டு, கலை, அறிவுமரபுகளைக் கொண்டாடுதல் என்ற போக்கு மேலெழுவதற்கு உந்துசக்தியாக இருக்கிறது. இன்று உலகமயம், தாராளமய, பன்னாட்டு வணிக நிறுவனங்களின் ஆதிக்கச் சூழலில் நவகாலனிய நுண்வடிவங்கள் பெருக்கமடைந்து வருகின்றன. இந்நிலையில் பழைய ஏற்றத்தாழ்வுக் கருத்தாக்கங்களும் பன்னாட்டு முதலாளியமும் கைகோர்க்கும் சூழல் உருவாகும் நிலை வருகிறது. ஒருவகையில் இரட்டைக் காலனிய / இரட்டை ஆதிக்க நிலையில் வாழ்தலாகிறது. அதாவது காலனியகாலத்துக்கு முந்தைய சாதிய, வருண, பாலின அடிப்படையிலான வைதீகக் கருத்தாக்கங்களின் ஆதிக்கத்துக்கு உள்ளாதல் என்பதும் உலகமயம், பன்னாட்டு உலக முதலாளியத்தினூடாக நவகாலனியத்துக்கு உள்ளாதல் என்ற இரட்டை நிலைகள் இருக்கின்றன. ஆனால் நவகாலனியத்தைப் புறநிலையில் வணிகம், பொருளாதாரக் காரணிகளினூடாக ஏற்றும் அகநிலை - பண்பாட்டு நிலையில் எதிர்த்தலுமாகிய இரட்டைத்தன்மை முன்வைக்கப்படுவது என்ற மிகவும் சிக்கலான சூழல் இருக்கிறது. இங்குக் கவனமாக அணுகவேண்டியிருக்கிறது. அதாவது, காலனிய நீக்கம் என்பதனூடாக வட்டார இலக்கியங்கள், இந்திய, தமிழ்ச் சூழலின் கலை அறிவுமரபுகள் மீள் கட்டமைப்பு செய்யப்படுவது என்பது முதன்மையாக்கப்படுகிறது.

இதை எப்படி அணுகுவது என்பது மிகவும் முக்கியமானது. சாதி, வருணப் பாகுபாடுகளையும் பாலின — பெண் ஒடுக்குதல், பால்புதுமையர், மாற்றுத்திறனாளர், பழங்குடிகள் முதலியவர்களை ஒடுக்குதலையும் உடைய ஏற்றத்தாழ்வு நிலைக்கு மீளவும் திரும்புதல் என்கிற ஆபத்து இதில் இருக்கிறது. உள்நாட்டின் பழைய கலை, அறிவு மரபுகளை அப்படியே கேள்வியின்றி ஏற்பது என்பது மிகவும் ஆபத்தானது. இது மேலும் காலனிய காலத்துக்கு முந்தைய சாதி, வருண, பாலின ஏற்றத்தாழ்வு நிலையை நோக்கியதாகவும், பன்னாட்டு நவீன புதிய காலனிய ஒடுக்குதலுக்கு ஊக்கமாகவுமே அமையும். இது, தலித்துக்கள், பெண்கள், பால்புதுமையர், மாற்றுத்திறனாளர், பழங்குடிகள் முதலியோரின் விடுதலை அல்லது சமத்துவக் கருத்தியல்களுக்கு எதிர்நிலையிலும் இது மீளவும் அடிமைத்தனத்தை நோக்கியதாகவுமே இருக்க முடியும். எனவேதான் காலனிய நீக்கத்தைக் காலனிய காலத்துக்கு முந்தைய நிலைமைக்குத் திரும்புதல் என்று கேள்வியற்ற வாதத்தை முன்வைப்பது என்பது ஒடுக்குமுறையின் செயல்திட்டமாகவே இருக்க முடியும். இவ்விடத்தில் ஸ்பிவாக் முன்வைக்கும் விளிம்புநிலை அரசியல் முக்கியத்துவம் உடையதாகிறது. "இந்திய நாட்டின் வரலாற்று மாற்றம், காலனித்துவத்துக்குப் பின், நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த காலனியமயமான தன்னிலைகளைத் தேசியத் தன்னிலைகளாக மாற்றியமைத்திருக்கிறது. ஆனால் இம்மாற்றம் அதிகாரமற்ற குழுவினராகிய விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர், பெண்கள் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கை முறையினை, போராட்டத்தினைப் பொருட்படுத்தவில்லை என்பதை ஸ்பிவாக் உள்ளிட்ட பின்காலனித்துவச் சிந்தனையாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்". (பஞ்சாங்கம், 2011 : 330)

அதாவது, தலித் விடுதலையை, தலித் பெண்விடுதலையை, பழங்குடியினர் விடுதலையை, பால்புதுமையர், மாற்றுத்திறனாளர் முதலியோரின் விடுதலையைக் கருத்தில் கொள்ளாத பழைமை, தொன்மைகளை அப்படியே முன்வைக்கும் எந்தக் காலனிய நீக்கச் சிந்தனையும் ஒடுக்குமுறையின் வடிவமாகவே இருக்கமுடியும் என்றே கருதவேண்டியிருக்கிறது. இவற்றை உள்ளடக்கிய காலனிய நீக்கமே இங்கு முதன்மைப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

காலனிய நீக்கம்- தேசியம் — தமிழ்த்தேசியம் — தமிழ் ஓர்மை: முரண்களும் களைவும்

இந்திய, தமிழ்த்தேசிய அடையாள முன்னெடுப்புகள் காலனிய நீக்கத்தின் ஒருபகுதியாக அமைந்தாலும் காலனியம் வழங்கிய நவீன உலகப் பார்வையை உள்ளடக்கியது என்பதை மறுக்கவியலாது. அவை கலை, அறிவு, அரசியல், தேசியம் முதலிய பல நிலைகளில் முந்தைய காலத்தைய பார்வைகளை உலகத்தன்மையிலான நிலைக்கு மாற்றியவை. தமிழவன் முன்வைக்கும் அகிலத்தன்மையை உள்வாங்கிக்கொண்ட தமிழின் ஓர்மை என்பதை, வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி.யூ. போப்வழி வரும் உலகத்தன்மையிலான பார்வை அயோத்திதாசர், பெரியார், பாரதிதாசன், சி. மணி என விளக்கலாம். இங்கு ஒரு இடையீடாக வீரமாமுனிவர் தொடக்கம் அமைந்த உலகத்தன்மையிலான தமிழின் பார்வை கமில் சுவலபில், ஜார்ஜ் ஹார்ட், வாச்செக் என வந்தாலும் மார்க்சியம், அமைப்பியல் எனத்தொடங்கி பின்நவீனத்துவம், பெண்ணியம் என வரும் பார்வை தமிழ்த் தன்னிலையை, அதன் உள்முரண்களை விமர்சனபூர்வமாக அணுக வழிவகை செய்கிறது. இப்பார்வையில் அயோத்திதாசர், பெரியாரை இயல்பாக இணைக்கவும் முடியும். இலக்கியத் தளத்தில் சி. மணியை தமிழவன் வழியாக இணைக்க முடியும். இதில் மறைமலையடிகள் முதலியோர் முன்வைக்கும் பார்வைக்கு அழுத்தம் இல்லாமல் போவது இயல்பானதே.

பரிதிமாற் கலைஞரின் தனித்தமிழியக்கம் பிராமண எதிர்ப்பு அற்றது என மதிப்பிடும் சிவத்தம்பி, பிராமணரல்லாதாரியக்கத்தின் முன்னணியில் நின்ற வேளாளச் சாதியினர் தமக்குக் கீழ் நின்ற சாதியினரைச் சமமாக நடத்தவில்லை என்னும் குற்றச்சாட்டு நிலவியது (சிவத்தம்பி,1979:65) எனச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அத்துடன்

மறைமலையடிகளின் தனித்தமிழியக்கம், ஆழ்ந்து நோக்கும்பொழுது தமிழர்களது அரசியல் வரலாறு, சமூக அமைப்பு, சாதி அடிப்படை முதலியனவற்றுடன் தொடர்புற்று நிற்கின்றதென்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது எனக்கூறும் சிவத்தம்பி, "பிராமணரல்லாதார் இயக்கம் மேற்கொண்ட தனித்தமிழியக்கம், மொழியைத் தூய்மையாகப் பேணுவதால் மாத்திரமே தமது இனத் தனித்துவத்தைப் பேணிவிடலாமென அவர்கள் கொண்டனரென்றே கொள்ளல் வேண்டும் (சிவத்தம்பி 1979: 67) எனக்கூறுவது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. எனவே பிராமணரல்லாதார் இயக்கத்தில் உள்ள சாதிய மேலாதிக்கமும் அதன் ஒரு பகுதியாக அமைந்த தனித்தமிழியக்கமும் காலனிய நீக்கத்தின், சமத்துவத்தை, விளிம்புநிலையை உள்ளடக்கிய/ மையப்படுத்திய ஒன்றாக எடுத்துக்கொள்ள இயலாது என்றே ஆகிறது. அதனால், இவற்றை உள்ளடக்கிய பார்வை மையப்படுத்தப்பட வேண்டுமென்பதும் முதன்மையாகிறது.

இவ்விடத்தில் தமிழ் ஆய்வு மரபு குறித்த ஒரு நோக்கு முக்கியத்துவமுடையதாகிறது. அதில் வ.சுப. மாணிக்கம், மு.வ., ராசமாணிக்கனார் என ஒரு பாதையை முன்வைத்தாலும், வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீ., தனிநாயக அடிகள் என இன்னொரு பாதையை ஆய்வில் முன்வைக்க முடியும். இதன் இன்னொரு புறம் மார்க்சிய ஆய்வுகளையும் அதன் தொடர்ச்சியாக அமைந்த அமைப்பியல், பின்நவீனத்துவம், பெண்ணியம், தலித்திய நோக்கிலான பார்வைகளையும் முன்வைக்க முடியும். இங்கு இறுதியாக உள்ள பார்வைதான் முக்கியமானதாகிறது. மற்ற பார்வைகளில் தமிழ் குறித்த மதிப்பீடுகளின் தொகுப்புப் பார்வையும் ஒப்பீட்டுப் பார்வையும் முன்வைக்கப்படுகிறது எனினும் விமர்சனபூர்வமான நோக்கு நிலைக்கு அதிக அழுத்தம் தரவில்லை. எனவேதான் இறுதியாக உள்ள பார்வையே காலனிய நீக்கத்தின் ஆக்கபூர்வமான பாதையை முன்வைப்பதாகிறது. இவற்றில் உள்ள உள்முரண்களையே இங்கு விவாதிக்க வேண்டியிருக்கிறது. கைலாசபதி, சிவத்தம்பி, நா.வானமாமலை, ஞானி, தமிழவன், க. பஞ்சாங்கம், க. பூரணச்சந்திரன் எனத் தொடங்கி ஒரு விரிவான பட்டியலை இதில் வழங்க முடியும். 80,90களுக்குப் பிறகு ஏற்பட்ட பின்நவீனத்துவ, தலித்திய, பெண்ணிய எழுச்சியின் பின்னணியில் இப்பார்வைக்குக் கூடுதல் அழுத்தம் தரவேண்டியிருக்கிறது. தமிழ்ச்சூழலில் பின்காலனியத்தின் ஆய்வுப் பரப்பு இங்கு அதிக முக்கியத்துவமுடையதாகிறது. இந்திய, தமிழகச் சூழலில் அயோத்திதாசர், பெரியார், அம்பேத்கரின் ஆய்வுகளும் அவற்றின் வழிப்பட்ட உலகத் தன்மையை உள்வாங்கிக் கொண்ட நவீனப்போக்கும் முக்கியத்துவம் அடைவது இதன் பின்னணியில்தான்.

அயோத்திதாசர் தொடங்கிவைத்த அறப்போராட்டம் எனும் நூலில், சாதிபேதமற்ற தமிழர்களை உருவாக்குவதற்கான திட்டவரைவு எனக் குறிப்பிடும் பிரேம், "ஆதிக்க சாதிகளின் வரலாறு வெறும் கட்டுக் கதைகள்தான், அவற்றிற்கெதிரான முட்டுக் கதைகளை (எதிர்க்கதைகளை) உருவாக்கித் தலைகீழாக்கம் செய்ய வேண்டும். மொழிப் பயன்பாடு, பொருள்படுத்தல், ஆவணப்படுத்தல், அறிதல் முறை என அனைத்திலும் தலைகீழாக்கம் மற்றும் தன்மேலாக்கம் நிகழ வேண்டியதின் தேவையை அயோத்திதாசர் அளவுக்கு செய்முறையில் நிறுவிக் காட்டிய அறிஞர்கள் வேறுயாருமில்லை" (பிரேம், 2019: 21) என மதிப்பீடு செய்கிறார். பெரியாரின் சாதி ஒழிப்பு, பெண்விடுதலை, பார்ப்பனிய எதிர்ப்பு முதலியன நவீனத் தமிழ்ச் சமூகத்தை வடிவமைக்க முனைந்தவை. அயோத்திதாசர், பெரியார்வழியிலான தமிழ்/ திராவிட அடையாளம் என்பது உலக நவீன விடுதலை, சமத்துவச் சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்டவை.

அம்பேத்கர் அடையாளம் காட்டும் நவீன எதிர்ப்பியக்கம் இந்தியாவின் பின்காலனியகால மக்கள் அரசியலுக்கான அடிப்படையை அமைத்துத் தந்துள்ளது (பிரேம்: 2019:81). புதிய தேசியக் கட்டமைப்பை, சமூகச் சீர்திருத்தத்தை மையமாகக் கொண்டே

அமையவேண்டுமென்கிறார் அம்பேத்கர், "கூடிச் செயலாற்றுவதைத் தடுப்பதால், சாதிமுறை, இந்துக்கள் ஒருங்கிணைந்து வாழ்ந்து, உணர்வு கலந்த ஒரு சமூகமாக உருவாவதைத் தடுக்கின்றது"(அம்பேத்கர், 2018: 88) என்கிறார். இங்குக் காலனிய நீக்கம் பெற்ற தேசியக் கட்டமைப்பின் அடிப்படை மாற்றமாகச் சாதிய விடுதலையை அம்பேத்கர் முன்வைக்கிறார்.

இங்கு தமிழின் ஓர்மை எனத் தமிழவன் குறிப்பிடுவது அனைத்துலக நவீனத் தன்மைகளை உள்வாங்கிக்கொண்ட ஒரு பண்பு என்பதாகும். "அண்ணா அகில உலக சீர்திருத்த மரபையும் புத்தொளி மரபையும் தமிழுக்குக் கொண்டுவந்தார். க.நா.சு. அகில உலக இலக்கிய மரபைத் தமிழுக்குக் கொண்டுவந்தார்" (தமிழவன், 2016: 111) என்றும், தமிழ்த்தேசிய உளவியலின் தொடர்ச்சியில் புதுக்கவிதைத் தோற்றத்தைக் கொண்டுபோய் வைத்தவர் சி. மணி என்றும் குறிப்பிடும் தமிழவன், "சி. மணிதான் முதன்முதலில் புதுக்கவிதை செக்குலர் மரபில் உருவாகத் தளமிட்டவர். ஈரோட்டில் பிறந்த பெரியாரைப் பக்கத்துச் சேலத்தில் சி.மணி புதுக்கவிதையின் உள்பரப்பில் கொண்டுவந்து கௌரவிக்கிறார்" (தமிழவன், 2016: 169) என மொழிகிறார். யாப்பை உடைப்பதுகூட தொல்காப்பியமரபுதான் என்பதையும் சி.மணி வலியுறுத்துகிறார். எனவே இங்கு தமிழவன் முன்வைக்கும் தமிழ்க்கவிதை மரபு என்பது மேலை நவீனத்துவத்தை உள்வாங்கிக்கொண்ட தமிழின் மரபைப் புதுப்பித்தல் என்ற நிலையில் இருக்கிறது என்றாகிறது. இவ்விடத்தில் கோவைஞானியின், "சமத்துவத்தையும் சமதர்மத்தையும் தனக்கு அடிப்படையாகக் கொண்ட அரசியல்தான் தமிழ்த்தேசியம் (தமிழவன், 2016: 194) என்ற கருத்தையும் இணைத்துக் காணவேண்டியிருக்கிறது.

எனவே இங்கு காயத்ரி ஸ்பிவாக் குறிப்பிடும் காலனிய நீக்க அரசியலில் விளிம்புநிலை அரசியலின் முதன்மையை முன்வைக்கும்போக்கை முன்னெடுத்தாகவேண்டிய நிலைப்பாடு இருக்கிறது. ஆகவே காலனிய நீக்க அரசியலின் பகுதியாக தமிழின் அடையாள அரசியலை, தமிழ்ப் பண்பாடு, கலை, இலக்கிய, அறிவுமரபுகள் என முன்வைக்கும்போது அது உலகத்தன்மையை உள்வாங்கிக் கொண்ட சமத்துவமுடையதாகவும் பன்முகத்தன்மையை ஏற்பதாகவும் அனைத்து விடுதலை அரசியல்களையும் உள்ளடக்கிய ஒன்றாகவும் இருந்தாகவேண்டியிருக்கிறது.

காலனிய நீக்கமும் விளிம்புநிலை முதன்மையும்

தமிழில் இன்று வட்டார, இனவரைவியல் ஆக்கங்களும் வரலாறு, தொன்மை, பண்பாட்டு முதன்மையாக்கச் செயல்பாடுகளும் தீவிரமடைந்துவருவதைக் காணமுடிகிறது. இது ஆக்கபூர்வமானதெனினும் இதன் உள்முரண்களைக் கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியமும் இருக்கிறது. இல்லையேல் அவை கேள்வியின்றி பழமைவாத மீட்பாகவும் நவீனப் பன்னாட்டு நுகர்வுக் கருத்தாக்கமும் இணைந்த ஒரு சிதைவுண்ட வெளியாகவும் மாறிவிடக்கூடிய நிலைப்பாடு இருக்கிறது.

பின்காலனித்துவ அரசியலில் காலனிய நீக்கம் என்பதில் பாரதி, பாரதிதாசன், சி.சு. செல்லப்பா என்று தொடங்கி பெரிய பரப்பை நாம் முன்வைக்கிறபோதும், செவ்வியல் பண்புகளை, இடைக்கால அரசியல் வெளிகளை முன்வைக்கிறபோதும் இவை எல்லாம் சமகால உலகத் தன்மையை உள்ளடக்கிய நவீன சமத்துவ கருத்தியல்களை உள்வாங்கிக் கொண்டதாகவும் இருந்தாகவேண்டியிருக்கிறது. இல்லையேல் அது காலனியகாலத்துக்கு முந்தைய பழைய சாதி, பாலின, வருணம் எனப்பல ஏற்றத்தாழ்வுகளின் மீள்புதுப்பிப்பாக மாறும் சிக்கல் இருக்கிறது. இது சமகால நவீன இருத்தலுக்கும் அகிலத்தன்மைக்கும் எதிரானதாக இருக்கிறது. எனவே காலனிய நீக்க அடையாள அரசியல் என்பது பெண்கள், தலித்துக்கள், பால்புதுமையர், பழங்குடிகள், மாற்றுத்திறனாளர் எனச் சமூகத்தின் எல்லாவகையிலும்

விளிம்பாக்கப்பட்டவர்களின் விடுதலை அரசியலில் இருந்து தொடங்கியாகவேண்டி இருக்கிறது. இத்தகைய தன்மையினூடேதான் இந்திய, தமிழ்ச்சூழலில் அம்பேத்கர், அயோத்திதாசர், பெரியார் முதலியோரின் சிந்தனைகள் முதன்மையாக்கப்படுகின்றன. அந்தவகையில் பின்காலனிய, காலனிய நீக்கச் சொல்லாடலில் தமிழின் அடையாள அரசியல் என்பது அகிலத்தன்மைகளை உள்வாங்கிக் கொண்ட, அயோத்திதாசர், பெரியார், அம்பேத்கர் முதலியோரின் சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்ட விளிம்புநிலைக் கருத்தியல்களை முழுதும் ஏற்ற தமிழின் ஆக்கபூர்வமான கலை, அறிவு மரபுகளை முன்வைக்கின்ற ஒன்றாகவும் இயற்கை, சூழலியல் முதலிய உயிரியல் பன்மைத்துவத்தை உள்ளடக்கிய ஒன்றாகவும் இருக்க வேண்டியிருக்கிறது.

முடிவுரை

வள்ளுவரின் ஒப்புரவும், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்ற கருத்தாக்கத்தையும் கொண்டு 2000 ஆண்டுகாலத் தமிழ் மரபின் உள்முரண்களைக் களைந்து கணியன் பூங்குன்றன், திருமூலர், சிவவாக்கியர், இராமலிங்கர், அயோத்திதாசர், பெரியார் என அதை விமர்சனபூர்வமாக அணுகி சமகாலத்தன்மையுடன் உலகநிலைப்பட்ட பார்வையில் புதுப்பிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அது விளிம்புகளை மையப்படுத்திய அல்லது மையமற்ற ஒரு சமத்துவ நிலையை உடையதாக அமையும். அந்தப் பின்காலனித்துவத் தமிழின் அடையாள அரசியலே காயத்ரி ஸ்பிவாக், பூக்கோ, ஹோமிபாபா, மார்க்ஸ், அயோத்திதாசர், பெரியார், அம்பேத்கர் முதலியோரின் வழிப்பட்ட நவீனம்பெற்ற சமத்துவ தமிழ் அடையாள அரசியலாக இருக்க முடியும்.

துணை நூல்கள்:

1. அம்பேத்கர். பி.ஆர்., இந்தியாவில் சாதிகள், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2018.
2. சிவத்தம்பி. கா., தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி, சென்னை புக் ஹவுஸ், சென்னை. 1979.
3. ஞானி, தமிழியம் தமிழ்த்தேசியம், காவ்யா பதிப்பகம், சென்னை: 2007.
4. தமிழவன், திராவிடம் தமிழ்த்தேசம் கதையாடல், அடையாளம் வெளியீடு, புத்தாநத்தம், திருச்சி. 2016.
5. பஞ்சாங்கம். க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர். 2011.
6. பிரேம், அயோத்திதாசர் தொடங்கிவைத்த அறப்போராட்டம், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி. 2019.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com